215

உ

பதிவு எண்—M 5720 | வெள்ளிக் கிழமையில் | குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-7 குருகுலம், மாம்பாக்கம்; செய, மார்கழி, கு. 31—12—54 தளிர்-13

REGISTRAR OF BOOKS MADRAS

5

''மனைமான் சுதரான'' என்னும்

## மதுராந்தகத் திருப்புகழ்க்கு

### உரைக் குறிப்பு

மனைவி, பெருமை பொருந்திய மக்கள் ஆகிய (சுணங்கரும்) சோர்தல் தருபவர்களும் மனம் நொந்து வெந்துபோதற்குத் (கிணையான) இடந் தருவதான செல்வங்களும், இறந்துபோகின்ற எளியேனைப் பெற்ற தெய்வத்துக்கு ஒப்பான தாய், உற்றாராய்ப் பயனற்றவர்களான பிறர் முதலானோர்தம்

மயமான பல வகைப்பட்ட கூட்டத்தார் குலத்தார் என்கிற மயக்கமும், 'யான்' 'எனது' என்று கூடியுள்ளனவாம் அளவு கடந்து செல்லுங் குணமும் நோக்கமும் இன்பத்துக்கும் இனிமைக்கும்

(இனி) தக்கதாகப் பொருந்திய தாண்டிச் செல்லுங் குதிரைகள், தான்யங்கள், தனங்கள் இருக்கும் ஊர் இவையெல்லாம் விட்டு நீங்கும்படி, என்னை என்றுகொண்டு மோன நிலையையும் மேம்பட்டு மிக்கு நிற்கும் தெய்வத்தையும் நான் கண்டு களிக்கக் கூட்டமான பெருமை தங்கிய தேவர்கள் ஏசுதலின்றி (நன்கு) பொருந்திய,

இடங் கொண்டு நிறைந்துள்ள முழந்தாள், நல்லதான கடகம் அணிந்துள்ள கரம், சிவந்த உடல், (இவைகளுக்கு) மேலான இடமான பெருமை பொருந்திய (உனது) திருவடியை நீ (எனக்கு) அருளும் (படி) நிலை அல்லது வாய்ப்பு என்றைக்கோ, அறிகிலேனே!

தன தாந்தன தான தந்தன......தன—என்னும்படியான சிரேஷ்டமான நடனத்தைச் செய்கின்ற எம்பிரான் சிவனார்

தமக்குரிய குழந்தையே! அசையாப் பொருள் அசையும் பொருள் எனப் பொருள்களைப் பாதுகாத்தல் செய்ய ஏற்படுத்தினவனே! புதுமை நிறைந்த தக்கதான தாப்பிருடம் எனப்படும் சேவலாற் சேவை செய்யப்படுபவனே! இன்பந் தருகின்ற தேவர் செல்வமே!

(முன) முன்ன—[அண்ணா! வா என்று முருகவேள்] நினைத்த உடனே—வரம் பத—தாண்டி வேகமாய் வந்த திருவடிகளை உடையவரும், மூடிக—பெருச்சாளி (வந்தனம்) வணக்கம் செய்யும்படி—(முயல்வான்) முயற்சி எடுத்துக்கொண்டவனும், பெண்யானை போன்ற வள்ளியின் பக்கத்தில் இமைத்த (காட்டானையாக) ஒளிவிட்டு விளங்கினவருமான விநாயக மூர்த்தியின் எதிரில் தோற்றிய தம்பியே! பொருந்தியுள்ள களிப்பு நிறைந்த அழகு செய்கின்ற கூட்டமாகிய ஆறு

(திரு) முகங்களுடன் கம்பீரமோடு வீறுடனே வீற்றிருக்கும் (சம்பன்ன) பாக்கியவானே! சம்பத்து உள்ளவனே! மதுராந்தக மகா நகரத்தில் விளங்குகின்ற முருகா! நல்ல உறுதியான (பக்தியுடன்) உள்ள தேவர்களின் தம்பிரானே!

(தன தாள் அருளும்படி என்றதாமே!)

சு. செங்கல்வராய பிள்ளை. M. A.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

7-ம் ஆண்டுக் கையொப்பம்
(8-10-54 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

| இலை | சேய, மார்கழி, | தளிர் |
|---|---|---|
| 7 | 31-12-54 வெள்ளி. | 13 |

குருகுலத்தார்
## பேட்டைத் தொண்டு

ஈரடெங்கும் சென்று செய்யும் குருகுலப் பணிகளில் இப் பேட்டைத் தொண்டுகள் அடங்கும். சென்னை மா நகரம் தமிழகத்தின் தலைநகரமாய்த் திகழ்கின்றது; எல்லா வகையிலும் சிறந்தவர்களும் அல்லாதாரும் அங்கே வாழ்ந்து வருகின்றனர். இந்தியாவின் வேறு வேறு மாகாணத்தவரும், வெளிநாட்டவரும், வேறு வேறு மொழி கல்ல இன் நாகரிகக்காரரும் சென்னையின் சிறுபான்மை இருந்துவருகின்றனர். ஆதலால் சென்னையில் குருகுலச் சார்பில் நான்கு இங்களாகத் தொடர்ந்து, நடைபெற்று வருகின்ற பேட்டைத் தொண்டுகள் மிக்க உணர்ச்சியும் பாவுதலும் உடையதாய் முதன்மை பெற்றுவருகின்றனர். சென்னையில் நடைபெறுவது உலகமெங்கும் நடைபெறும் உணர்ச்சியைத் தருகின்றது!

அன்பர் ஊக்கம், பேட்டையினர் ஆக்கம், பெருமக்கள் ஆதரவு பற்றி ஆசிரியர் தமது உள்ளக் கனிவை இதன்முகமாகப் புலப்படுத்திக் கொள்கின்றனர்—

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மாலை மணி 5. திருமுறைஓதுதல்
தலைவர் முன்னுரை.

'மங்கையர்க்கரசியார்' தேவக் கோட்டை தருமபுர ஆதீன வித்துவான். சித்தாந்தப் புலவர் மாமணி, பாலகவி திரு. வயி. வே இராம நாதன் செட்டியார் அவர்கள்.

'கடவுள் வழிபாடு' தேவகோட்டை வயிநாகரம், ராம செல்வி. மீனாக்ஷி அவர்கள்

'திருநேரிசை' கும்பகோணம் அரசினர் கல்லூரி முன்னாள் தமிழ் விரிவுரையாளர், பேரூர் பண்டித. திரு. அ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள். தருமபுரம்

'குலச்சிறையார்' தருமபுரம், கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரித் தமிழாசிரியர் வித்துவான் திரு. C. சிங்காரவேலு தேசிகர் அவர்கள் தலைவர் முடிவுரை.

நன்றி வணக்கம் கூறல், திருக்கூட்டத்தினர் வாழ்த்து.

# புனிதவதிப் பிராட்டியார் நினைவு நாள்

சய ஆண்டு மார்கழித் திங்கள் 16-ம் நாள் (3-1-55) திங்கள்

தலைவர்:—மாம்பாக்கம் குருகுல ஆசிரியர், திரு. இளவழகனார் அவர்கள், மாம்பாக்கம்.

காலை மணி 7-30. இந் நகர் மகாதளம் பேட்டை பெரிய அப்பாவு செட்டித் தெரு (தங்கங்கிளி ஆச்சி) என்கிற திருமதி சிவகாமி அம்மையாரின் அறுபத்து மூவர் குருபூசை மடத்திலிருந்து அடியார்கள் திருமுறைப் பாராயணத்துடன் புறப்பட்டு இந் நகர் ஸ்ரீநாகேசர் கோயிலில் வழிபாடு செய்தல்.

மாலை மணி 5. திருமுறை ஓதுதல்:

'வளர்ச்சிக்கு வழி' தலைவர் முன்னுரை.

'புனிதவதியார்' தருமை ஆதீனப் புலவர் வித்துவான் நாகை சண்முக தேசிகர் அவர்கள் தலைமைத் தமிழாசிரியர் நாட்டு உயர்நிலைப்பள்ளி நாகை.

'சைவ மங்கையார்' வித்வான் வீ. ச. நடராச பிள்ளை அவர்கள். நகராட்சி உயர்நிலைப் பள்ளி குடந்தை.

தலைவர் முடிவுரை.

நன்றி வணக்கம் கூறல்—திருக்கூட்டத்தினர்.

குறிப்பு:— இடையிடையே இன்னிசையோடு தமிழ்மறை ஓதப்பெறும். நன்கொடை அளிப்பவர்கள் மகாநாட்டு மன்றத்திலேயே செயலாளரிடம் அளித்து ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

பெண்கள் அமரத் தனியிடமுண்டு. ஒலிப்பெருக்கி உண்டு.

உ

சென்னை

அடியார் திருக்கூட்ட இறைபணி மன்றத்து

அடியார்கள்

மதுராந்தகத்தை அடுத்த குருகுலத்தின்

வடதிருச்சிற்றம்பலக் குருபழநித் தலத்து

வழிபாட்டுக்கு வருகை புரிந்தபோது (31-12-54)

அதன் நினைவாகக் குருகுலத்தார் வெளியிட்ட

## வரவேற்பு நினைவு வெளியீடு!

---

### மதுராந்தகத் திருப்புகழ்

மனைமான் சுதரான சுணங்கரு
மனம்வேந் தினை யான தனங்களு
மடிவேன் றனை யின அணங்குறு வம்பாதி
மயமாம்பல வான கனங்குல
மெனப்ராந்தியும் யானென தென்றுறு
வனவாம்பிர மாத குணங்குறி யின்பசார
இனவாம்பரி தான்ய தனம்பதி
விடஎன்றெனை மோன தடம்பா
மிருதாம்பதி காண கணங்கன வும்பரேசா!
இடவார்ந்தன சானு நயம்பெறு
கட.காங்கர சோண வியம்பா
இடமாங்கன தாளரு ளும்படி என்றுதானே?
தனதாந்தன தான தனந்தன
தெனதோங்கிட தோன துனங்கிட
தனவாம்பர மான நடம்பயில் எம்பிரானுர்
தமதாஞ்சுத தாபா சங்கம
மெனவோம்புரு தாவன வம்படர்
தகுதாம்பிர சேவித ரஞ்சித உம்பர்வாழ்வே!
முனவாம்பத மூடிக வந்தன
முயல்வான்பிடி மாடிமை ஐங்கார்
முகதாம்பின மேவுறு சம்ப்ரம சங்கணுற
முககாம்பிர மோடமர் சம்பன
மதுராந்தக மாநக ரந்திகழ்
முருகாந்திர மோடம ரும்பர்கள் தம்பிரானே!

---

## வடதிருச்சிற்றம்பலத் திருப்புகழ்

1. குதிபாய்ந்தி ரத்தம் வடிதொளைத்தொக்
கிந்த்ரி யக்கு ரம்பை வினைகூர்துர்

## குருகுலத்தார் வழிபாடும் தொண்டும்

(முத்துசாமி)

(முன் தொடர்ச்சி)

குருகுலத்தார் ஆசிரியர் அவர்களுடன் 18-12-54 சனிக்கிழமையன்று இராயபுரத்தில் சுப்பிரமணிய ஆலயத்தில் வழிபாடும் தொண்டும் இயற்றினர். வழக்கம்போல் மக்கள் திரளாக ஊர்வலத்திலும், வழிபாட்டிலும், பேரவையிலும் கலந்துகொண்டனர். முன்னாள் சென்னை முதல் அமைச்சர் திரு. இராஜாஜி அவர்கள் பேரவைக்குத் தலைமை தாங்கினர்.

ஆசிரியர் அவர்கள் விரிவுரையில் கூறியதாவது:- "மக்கள் அறிவுத் தெளிவுடன் மனக் கவலையின்றியும் சௌகரியங்களுடனும் நீடித்து வாழ விரும்புவதோடு சூழலால் தாக்கற்றும் இருக்கப் பழகிக் கொள்ளவேண்டும். அவ்வாறு பழகிக் கொண்டால் பிறவி சுமையாயிராது. இனிப்பிறவியே இல்லாதவாறும் பண்ணிக் கொள்ள வேண்டும். இதற்கு இறைவனைச் சார்ந்தால்தான் முடியும்.

சார்தல் என்பது அருகே இருப்பதன்று அவனுடைய கொள்கையோடு ஈடுபடுதலே சார்தல் என்பதாம். அவன் கொள்கை, உயிர்கள் நலத்துக்குப் பாடுபடுதல். ஆதலால் அவனோடு ஈடுபட வேண்டுமாயின் நாமும் பிறர்க்கென வாழ்ந்து பயன்பட வேண்டும். அப்படிச் செய்தால் தான் நம் அறிவு கனிந்து அன்பாக மாறும். அந்த அன்பில்

குணபாண்ட முற்ற கிலமெனக்கைக்
கொண்டி லேத்த யர்ந்து சுழலாதே;
உதிதாம்ப ரத்தை உயிர்கெடப்பொற்
றிண்கி ணிச்ச தங்கை விதகீத
உபயாம்பு யப்பு ணையையினிப்பற்
றுங்க ருத்தை யென்று தருவாயே;
கதைசார்ங்க கட்கம் வளையடற்சக்
ரந்த ரித்த கொண்டல் மருகோனே!
கருணைஞ்ச னக்க மலவிழிப்பொற்
பைம்பு னக்க ரும்பின் மணவாளா!
மதனுக்த கர்க்கு மகவெனப்பத்
மக்த னிற்பி றந்த குமரேசா!
மதுராந்த கத்து வடதிருச்சிற்
றம்ப லத்த மர்ந்த பெருமாளே!

2. சயிலாங்க ணைக்கு ருகியி டப்பக்
கங்கொ டுத்த கம்பர் வெகுசாரி
சதிதாண்ட வத்தர் சடையி டத்துக்
கங்கை வைத்த நம்பர் உமைமாளச்
செயல்மாண்டு சித்தம் அவிழ நித்தத்
த்வம்பெ றப்ப கர்ந்த உபதேசம்
சிறியேன்ற னக்கும் உமைசெ யிற்சற்
றுங்கு ருத்து வங்கு றையுமோதான்?
அயில்வாங்கி யெற்றி உததி யிற்கொக்
கன்ற னைப்பி ளந்து சூர்வாழ
அகிலாண்ட முற்று நொடியி னிற்சுற்
றுந்தி றற்ப்ர சண்ட முழுநீல
மயில்தாண்ட விட்டு முதுகு லப்பொற்
குன்றி டித்த சங்க்ர மவிநோதா
மதுராந்த கத்து வடதி ருச்சிற்
றம்ப லத்த மர்ந்த பெருமாளே!

## குருபழநித் திருப்புகழ்

யதுகுல காம்போதி ராகம்:- ஜம்பை தாளம்:-

3. அமரபுரி யாசுமகிழ் ஆட்சிக் கதென்று சுரசேனை-
அணைபமகிழ் அருள்வடிவ! ஆற்றைக் கடந்த கவிபாடி!
சமரபுரி யமர!சிவ சாட்சிக் குனன்பன் அடியேனைத்-
தழுவியணை தாவருக! சாற்றப் பரிந்து தமிழ்தாராய்;
நமரபர குக!பனிரு நாட்டக் கடம்ப முருகோனே!
நளினமலர் அளிமுரலு நாற்றத் துயர்ந்த தொடைமார்பா!
குமரகுரு பர!கொடிய கூற்றைக் கடிந்த பான்வாழ்வே!
குருபழநி வருமுருக கோட்டத் தமர்ந்த பெருமாளே!

இறைவன் நன்ருய்த் தங்கு வான்.

திருவள்ளுவரும் இக் கருத்துக் களையே முதலில் தெரிவித்துக் கொண்டு மேலும் பல சொல்லு கிருர்; ஆனமையின் நாமும் இதனைத் தெளிவாகக் கடைப் பிடிக்க வேண்டும். திருக்குறட் பாயிரத்தில் கடவுள் வாழ்த்து முதற்பொருளைப் பற்றிச் சொல் லும். வான்சிறப்பு அம் முதற் பொருளின் வெளிப்பாட்டைச் சொல்லும். நீத்தார் பெருமை அவ்வாறு அதனை வெளிப்படுத் தும் ஞானிகள் பெருமையைச் சொல்லும். அறன் வலியுறுத் தல், அதனை அவர் வெளிப்படுத் தும் திறனைப் பற்றிக் கூறும். அதாவது, வான்சிறப்பிற் கூறிய மழையை எடுத்துக்கொண்டு நீத்தார் வெளிப்படுத்துவர் என்று கூறும்.

பின்னர்த் திரு. இராஜாஜி பேசியதாவது:- குருகுல ஆசிரி யர் அவர்களின் பேச்சு நல்ல உருக்கத்தைத் தருவது என்றும், இத்தகைய கூட்டத்தில் ஈடுபடு வோர் மனம் மகிழ்ச்சியுடன் மலர்ந்து காணப்படுவதாயும், ஏனைய கூட்டத்தில் சினமும் சீற்றமும் தெரிகின்றன என்றும், மக்களிடம் உள்ள விஷத் தன்மை இம்மாதிரி அமுதப் பேச்சால் தீர்கிறது என்றும், ஏனைய பேச்சால் அது மேலிடு கிறது என்றும் கூறி, மேலும் பேசுகையில், இராமன் சரிதை யில் உள்ள குறைகளை எடுத்துக் காட்டுவதைவிட மக்கள் அதில் உள்ள நற்குணங்களை எடுத்துக் கொண்டு, காணப்படுவதாகக் கூறப்படும் குறைகளும் இல்லாத மாதிரி நடந்து உய்தல் நல்லது என்றும், அப்படி யாரேனும் இருந்தால் அவர்களை இராமனை

ஹரிகாம்போதி ராகம்:- ஜம்பை தாளம்:-

4. அடலுடைய வடிவயிலும் அழகுபுனை மழமயிலும்
அறுமுகமும் அருள்வடிவு மறவாதே-
அநுதினமும் நினைமனதி னடியர்தொழ நெடியமலை
அரசனென முரசறைய அருளோடே;
திடலுடைய நடனம்நவில் சிவகுமா னென அரிய
திருநடன மிடுசரணம் ஒலிகோலத்-
திருவருள்செய் தருவுருவ னொருவனென மருவுமுன
திருவடிகள் தருகருணை யுளதோதான்!
மடலுடைய மலர்குரவு விரவுமொரு திருவகல
மணிமகுட மணியழகு வடிவாளா!
மவுனமறை பரவுமுநி யருணகிரி குருமுனிவன்
வழிபடவொர் மொழியுரைசெய் குருநாதா!
குடலுடைய வுடல்கிழிய இரணியனை யமர்பொருது
குருதிபரு கியவொருவன் மருகோனே!
குறவநிதை சுரவநிதை யிருபுறமும் மருவவுயர்
குருபழநி கருதிவளர் பெருமாளே!

5. அருளினைச் சித்தம் புகவுடன் அருளிப் பலகாலும்-
அடிதொழச் சுத்தம் படுமன மடைசிப் பணிவாகத்;
தெருளினைப் பெற்றுய்ந் திடஅருள் கருணைத் திறலாலே-
சிவமதைச் சற்றிங் குணர்தர வழியைப் புகல்வாயே;
இருளினைச் செற்றின் திருவருள் வடிவத் தொளிர்வோனே!
எமபடர்ச் சுற்றம் குறுகிட வெருவற் கெறிவேலா!
மருளினைச் சுட்டென் பவமற வகையைப் புரிவோனே!
வடதிருச் சிற்றம் பலகுரு பழநிப் பெருமாளே!

சுருட்டி ராகம்:- ஜம்பை தாளம்:-

6. வடவையன லெனவாகைப் படையோடு-
வருமறலி பனிவாசற் குறுகாதே;
மடமையற அடியேனுக் கருளான-
வழிவகையை யுபதேசித் தருள்வாயே;
குடவயிற துடையானைக் கிளையானே!
குலதடினி சடைசூடிக் குபதேசா!
குடமுனிவன் அடிபேணித் தொழுவேளே!
குருபழநி குருநாதப் பெருமாளே!

"குதிபாய்ந்து" என்னுந் திருப்புகழின் உரை:

குதித்துப் பாய்ந்து ரத்தமானது வடிகின்ற தொளைகளையுடையதும் தோலோடு கூடியதும் ஐம் பொறிகளுடன் கூடியதுமான உடல், வினை மிகுந்து நிரம்பியுள்ள குணங்களுக்குக் கொள் கலமான உடம்பு, இதனை அடைந்து அகிலமெனக் கைக்கொண்டு இந்த உடம்பே (உடம்பைப் போற்றுதலே) எல்லாம் சகல செல்வமாம் என மேற்கொண்டு அதனால் இளைத்துச் சோர்வுற்றுத்

விட மேலானவர்களாகக் கருதி வணங்கலாம் என்றும் கூறினார்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை அதேகோயிலில் "திருவடி" வழிபாடு நிகழ்த்திவிட்டுத் திருவடியைப்பற்றி ஆசிரியர் அவர்கள் பேசும்பொழுது, இத் திருவடி தனக்குவமை இல்லாதவன் எவனோ அவனுடைய திருவடியாகும் என்றும் இத் திருவடி மாணிக்கவாசகர் உலகிற்குத் திருக்கழுக்குன்றத்தில் வழங்கிய இறைவனுடைய திருவடியாகும் என்றும் தெரிவித்துவிட்டு, அப்பர் தேவாரத்திலுள்ள திருவடித் திருத்தாண்டகத்தில் ஒரு பாடலுக்கு வழக்கம்போல் பொருள் விளக்கினர்.

நன்றியுரையுடனும், வாழ்த்துடனும் கூட்டம் முடிந்தது.

Phone 55034 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை, 1

திரியாமல் (போற்றித் துதிக்கத் தக்க மனத்தில்) உதிக்கின்ற தாகும் பரம் பொருளே, ஆன்மத்துவம் நீங்க, அழகிய கிண்கிணி சதங்கை இவை விதம் விதமாகக் கீதங்களைச் செய்யும்

இரண்டு தாமரையன்ன (உன்) திருவடிகளாம் தெப்பத்தை இனியேனும் பற்றி உய்யும் கருத்தை (எனக்கு) எப்போது தருவாய்?

கதை, சார்ங்கம், வாள், சங்கு, வலிமை வாய்ந்த சக்கரம் எனப்படும் பஞ்சாயுதங்களைத் தரித்துள்ள மேக நிறத்துத் திருமாலின் மருகனே!

கருணையும் மையுங்கொண்ட தாமரையனைய கண்களைக் கொண்ட அழகிய பசிய தினைப்புனத்திருந்த கரும்புபோல இனித்த வள்ளியின் மணவாளனே!

மன்மதனுக்கு யமனாயிருந்த (மன்மதனை எரித்தழித்த) சிவபிரானுக்குக் குழந்தையாகத் தாமரையிற் பிறந்து விளங்கின குமரேசனே!

மதுராந்தகத்தில் வடதிருச்சிற்றம்பலத்தில் அமர்ந்து விளங்கும் பெருமாளே!

(உபயாம்புயப் புணையைப் பற்றுங் கருத்தைத் தருவாயே)

"சயிலாங்கனைக்கு" என்னுந் திருப்புகழின் உரை:

மலைமகளாகிய பார்வதிக்கு அவள் பக்திக்கு உருகித் (தமது) இடப் பாகத்தைத் தந்தருளின சிவனார், பலவிதமான (சாரீ) வட்டமாய் ஓடுதல் முதலான கூத்துக்களையும் தாள ஒத்துக்களையும் கொண்ட ஆடலை யுடையவர், சடையிடத்திலே கங்கையை வைத்துள்ள பெருமான் ஆகிய சிவபிராற்கு வாக்கு அழியவும்,

செயல் அழியவும், மனம் அழியவும், என்றும் உளதாம் தன்மையைப் பெற நீ செய்த உபதேசத்தைச்

சிறியவனாகிய எனக்கும் நீ சொல்லி உதவினால் கொஞ்சமேனும் உனது (குருத்துவம்) குருமூர்த்தியாம் பதவி குறைந்துவிடுமா என்ன!

வேலாயுதத்தை எடுத்துச் செலுத்திக் கடலிலிருந்த மாமரமாய் நின்ற சூரனைப் பிளந்து, தேவர்கள் வாழ,

சகல அண்டங்கள் முழுமையும் ஒரு நொடிப்போதில் சுற்றின வலிமை வாய்ந்த, கடுமை கொண்ட முழுநீல நிறங்கொண்ட

மயிலைப் பாய்ந்தோடச் செய்தவனும், பழைய சிறந்த பொன்மயமான மேருமலையைச் செண்டால் அடித்தவனுமான போர் விளையாடலை உடையவனே!

மதுராந்தகத்து வடதிருச்சிற்றம்பலம் என்னும் திருக்கோயிலில் வீற்றிருக்கும் பெருமானே!

(குருத்துவங் குறையுமோதான்)

## "ஒன்றே குலமும் ஒருவனே தேவன்"

### என்னும் உண்மையை உணர்த்தவேண்டும்

சேலம் மாவட்டத்திலுள்ள இராசிபுரம் வட்டத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மாநாட்டைத் திறந்து வைத்துக் கல்வித் துறைத் தலைவர் திரு. சுந்தர வடிவேலு அவர்கள் தந்த அறிவுரை:

'இங்கிலாந்தில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பாடத் திட்டம் இல்லை; ஆசிரியர்களை அவ்வளவு நம்புகிறார்கள். பக்குவ நிலையை ஒட்டி, முடிந்த அளவு போதிக்கும்படி விட்டிருக்கிறார்கள். ஆசிரியர்களும் அதற்கேற்றபடி நம்பிக்கை தவறாதபடி நடந்து கொள்ளுகிறார்கள்" இவ்வுண்மைகளை ஆசிரியர்கள் கருதிப் பார்க்க வேண்டும்.

மாணவர்களின் வேற்றுமையுணர்ச்சிகள் அகல வேண்டும்; சாதித் தொல்லைகளும் ஒழிய வேண்டும்; அவர்களுக்குள் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் மனப்பான்மை வளர வேண்டும்; 'நான்' 'நீ' என்னும் மனப்பான்மை அகன்று 'நாம்' என்னும் பொதுமை உணர்வு அரும்பி மலர வேண்டும்." இவற்றிற்கு ஆசிரியர்கள் முயல வேண்டும்.

இன்றைய நிலையில் நம் நாட்டில் 100 க்கு 15 பேர் தான் படித்

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros,

GENERAL HARDWARE MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

உ

நமச்சிவாய வாழ்க! திருச்சிற்றம்பலம் நாதன்றாள் வாழ்க!!

# திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம்

## கும்பகோணம்

## ஏழாம் ஆண்டு நிறைவு விழா அழைப்பிதழ்

திருச்சிற்றம்பலம்

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

அன்பர்களே!

இத் திருக்கூட்ட 7-வது ஆண்டு நிறைவு விழா தில்லையில் ஆடும் எல்லையில்லானந்தத் திருநடராசப் பெருமான் திருவருட்டுணை கொண்டு நிகழும் சய ஆண்டு மார்கழித் திங்கள் 17, 18, 19, ஆகிய மூன்று நாட்களிலும், இந் நகர் ஸ்ரீ ஆதி கும்பேசுர சுவாமி கோயில் ஸ்ரீ மங்கள விலாச நூல் நிலையத் திருக்கல்யாண மண்டபத்தில் நிகழ்ச்சி நிரலில் கண்டபடி நடைபெறும்.

அப்பொழுது அன்பர்கள் அனைவரும் உரிய காலத்தே வந்து கலந்து சிறப்பித்து இன்புறுமாறு வேண்டப்படுகிறார்கள்.

S. சிவகுருநாத செட்டியார் பொருளாளர் & செயலாளர். கும்பகோணம் (24-12-54)

P.T.S. குமாரசாமி செட்டியார் தலைவர்
K. RM. சிங்காரம் செட்டியார்.
முத்த. வெ. சொக்கலிங்கம் செட்டியார் துணைத்தலைவர்கள்.

# திலகவதிப் பிராட்டியார் நினைவு நாள்

சய ஆண்டு மார்கழித் திங்கள் 17-ம் நாள் 1-1-55 சனிக்கிழமை

தலைவர்:—பழுகி சித்தாந்த சரபம் மகாமகோபாத்தியாய சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார் அவர்கள்.

காலை மணி 7. இந் நகர் ஸ்ரீ சோமேஸ்வர சுவாமி கோயிலிலிருந்து திருமுறைகளை எழுந்தருளச் செய்துகொண்டு, பாராயணத்துடன் புறப்பட்டு ஆதிகும்பேச்சுர சுவாமி கோயில் திருக்கல்யாண மண்டபத்தில் எழுந்தருளச் செய்தல்.

குள்ளதாகக் கணக்கு; உண்மையில் நன்கு படித்தவர்கள் இன்னும் குறைந்த அறிவினர்களே யாவர். நாட்டுக்குப் பயன்பட வாழ வேண்டும்; 'குறைந்த சம்பளம் பெறுவதால், குறைந்த வேலை செய்யலாம்' என்று எண்ணாதீர்கள்; சின்ன மனிதர்களாகிவிடாதீர்கள். முழு மனிதனாகப் பயனுள்ள வாழ்வு வாழுங்கள்; அரை, கால் மனிதனாக ஆகிவிடாதீர்கள். ஒன்றும் கிடைக்காதவர்கள் ஆசிரியர்களாக வந்திருக்கலாம்; அதனால் அது தாழ்ந்ததாகி விட்டது. நம் தொழில் பற்றி நாம் பெருமை கொள்ளலாம்; கொள்ளத் தகுதியும் இடமும் மிகுதியாக இருக்கிறது.

ஓர் ஆசிரியர் தன் ஊழிய காலத்தில் 1000 குழந்தைகளுக்காவது பயிற்சி அளிக்கின்றார். பல ஆசிரியர்கள் வறுமைப் பட்டிருந்தாலும் நல்ல மனம் படைத்திருக்கின்றனர்; இதில் எனக்கு நேரில் அனுபவம் உண்டு.

சம்பளம் குறைவு என்று நல்ல பணி செய்யக் கிடைத்துள்ள நல் வாய்ப்பைக் குறைவாக எண்ணாதீர்கள்;

இங்கிலாந்திலும் ஆசிரியர்களுக்கு மற்றவர்களுக்குக் கிடைப்பதை விடக் குறைந்த ஊதியமே கிடைக்கின்றது. முன்பு கிடைத்ததைவிட இப்போது அதிகம் கிடைப்பது உண்மை. தன்மான உணர்ச்சி மூலம் அவர்கள் பொறுப்பு குறையவில்லை. ஆகவே ஆங்கிலேயர்களால் முடிந்தது; முயற்சி செய்தால் நமக்கும் ஏன் முடியாது? முடியும்; அவர்களையும் விஞ்சலாம் முயன்றால். இந்த உணர்ச்சி உங்களிடம் வந்த காலத்தில் உங்களை ஒருவரும் புறக்கணிக்க முடியாது;

காலை மணி 9. சைவ சமயாச்சாரிய சுவாமிகள், திருமுறைகள் வழிபாடு

மாலை மணி 4. திறப்பாளர் திருக்கைலாய பரம்பரை திருத்தருமை ஆதினத்து ஞான பீடாதிபதிகள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானம் சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளவர்களை வரவேற்றல்

மாலை மணி 5. திருமுறை ஓதுதல்
ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானம் அவர்களின் சிறப்புரையும், ஆசியுரையும்,

'திலகவதியார்' தலைமை உரை,

'இயற்பகை எற்றமும், இறைவன் தோற்றமும்' } பெருஞ்சொல் விளக்கனார் திருச்சிராப் திரு. அ. மு. சரவண முதலியார் [பள்ளி அவர்கள்

'திருவாளன் திருநீறு' தருமபுரம் கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர் சித்தாந்த ரத்னகரம். திரு முத்து. சு. மாணிக்க வாசக முதலியார் அவர்கள்,

தலைவர் முடிவுரை.

நன்றி வணக்கம் கூறல். திருக்கூட்டத்தினர் வாழ்த்து.

## மங்கையர்க்கரசிப் பிராட்டியார் நினைவு நாள்

சய ஆண்டு மார்கழித் திங்கள் 18-ம் நாள் 2-11-55) ஞாயிறு

தலைவர்:—தருமபுர ஆதினம் கீழ்த்திசைக் கல்கலைக் கல்லூரித் துணைத் தலைவர் உயர்சைவத் திரு. கி. இராமலிங்க முதலியார் M. A. அவர்கள்.

காலை மணி 7 இந்நகர் ஆண்டியப்ப முதலியார் தெரு வெள்ளை விநாயகப் பெருமான் கோயிலிலிருந்து அடியார்கள் திருமுறைப் பாராயணத்துடன் புறப்பட்டு ஆண்டியப்ப முதலியார் தெரு, ...டிப் புதுத் தெரு. வியாபாரிச் செட்டித் தெரு, ... பிள்ளையார் கோயில் தெரு, வடக்குத் தெரு, நா...க்காரத் தெரு, கம்பட்ட விசுவநாதர் வடக்குவீதி, ஆதி கும்பேசர் வடக்கு வீதி, கீழவீதி வழியாக ஷை கோயிலுக்கு வழிபாடியற்றச் செல்லுதல்.

காலை மணி 10 அக் கோயிலில் இந்நகர் சிவநேசச் செல்வர் ஜவுளி உயர்திரு. மா. அருணாசலம் செட்டியார் அவர்கள் அறுபான் மும்மை நாயன்மார்களுக்கு, நடத்தும் விசேட அபிடேக அலங்காரம் முதலியவைகளைத் தரிசித்து அக்கோயிலிலேயே அவ் வார வழிபாட்டைச் செய்தல்.

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

தவறும் குழந்தைகளை வடிக்காமல் திட்டாமல் தன்னம்பிக்கை ஊட்டித் திருத்த வேண்டும். பள்ளிக்கூடம் வெட்கப்படாமல் முயற்சிக்கும் கூடம் ஆகும்.

இங்கிலாந்தில் அச்சமின்மையும், உரிமையும் முழு அளவில் இருக்கின்றன

புதிய தலைமுறை, நாணயத்திலே நல்ல முறையிலே வளர, நீங்கள் பாடுபடவேண்டும். நடக்குள்ளிருக்கும் அவ நம்பிக்கை போகவேண்டும்; அழுக்கில்லாமல் தூய்மையாக இருக்கும் பண்பு வளர வேண்டும். தனி மனிதர் தூய்மை, வீடு, தெரு, ஊர்த் தூய்மை காக்கும் உணர்ச்சியைக் குழந்தைகளுக்குப் போதிக்க வேண்டும். அறிவு திறமை ஆண்மை மட்டுமல்ல, நல்ல பழக்க வழக்கங்களையும் மாணவர்களிடை ஏற்படுத்த வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொள்ள வேண்டும்.

**கிராம மக்களின் நல்லுணர்ச்சி:**

கோவில் பட்டியை அடுத்த சுரக்காய்ப் பட்டி கிராமத்தில் 100 வீடுகள் உள்ளன. பள்ளிக்கூடமே இல்லாத அவ்வூரில் அரசாங்கத்தார் அண்மையில் ஓர் ஓற்றை ஆசிரியர் பள்ளியை அமைத்தனர். ஆசிரியர் குடி இருப்பதற்கு வீடு இல்லாமல் இருந்தது. உடனே ஊர் மக்கள் ஒன்று கூடிப் பணம் திரட்டி ஆயிரம் ரூபா. பெறுமான இரண்டு வீடுகளை ஆசிரியர்களுக்காகக் கட்டித் தந்துள்ளனராம்.

'தன் கையே தனக் குதவி' என்ற வகையில், தங்களூர்ப் பள்ளி ஆசிரியருக்குத் தாங்களே வீடு கட்டித் தந்த அவ்வூர் மக்களைப் பலரும் பாராட்டுவது இயல்புதானே.

சு. மி.

...அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம் மதுராந்தகம் (அஞ்.)